**Editor's Note**

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' Uduvil, Chunnakam.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 8920 / 78.*

Established: 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol. 141 Jaffna, Friday, 2nd January, 1981 No. 1

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

**Subscription**

Inland Rs. 35/- per year.

*Apply to*

The Manager, 'Morning Star', Vaddukoddai.

SRI LANKA · JAFFNA CAMPUS · RECEIVED 1981-1-7 PERIODICALS DIVISION · LIBRARY ·

## Subscription

Due to the rise in the cost of postage, the subscription for *The Morning Star* has been raised from Rs. 30 to Rs. 35.

The foreign Air Mail rates will also have to be raised. The rates for minimum advetisement is Rs. 50 with effect from 1-1-81.

---

## Christian Unity Week

The theme suggested by the Commission on Faith and Order of the WCC for the observance of Christian Unity Week is :- *One spirit — Many Gifts — one Body.*

The National Christian Council of Sri Lanka has suggested the following ways in which the observance can be made more effective :-

a) Joint United Services consisting of NCC Churches, and Roman Catholic Churches be organised in as many areas as possible.

b) Joint Prayer Meetings of SCM, YMCA and UMCA units in Schools and Colleges.

The main meeting in Colombo will take the usual form of a Joint Services of NCC and Roman Catholic Churches.

## Sri Lanka The Medical Frontier

The number of UN volunteer doctors from the Phillipines, India and Burma currently serving in the Island is 130.

Fifteen more Burmese Doctors are due to arrive next month. They are general practitioners who, after a 15-day Orientation Course, will be posted to rural periphral units.

The Deputy Director of Health, Dr. Malinga Fernando and a UNDP team are now in Manila interviewing doctors in the Phillipines. These doctors will also be trained in sterilisation techniques.

**The Medical Faculties**

The Government has now increased the intake of medical students from 250 to 400 a year after the setting up of the Medical Faculties in Jaffna and Galle (Ruhuna).

While, according to certain reports, the country will face an excess of doctors in 1985 when the four medical faculties would have produced 1650 doctors, (the present shortage of doctors is 800), the Ministry of Plan Implementation has requested the University Grants Commission to make provision for 600 medical students to be admitted every year.

The Physician—to—population Ratio in Sri Lanka is 1 to 5000; In India the Ratio is 2.2 to 100,000 while in USA it is 1 to every 300.

*Letter to the Editor*

## Place of English in our National Life

There is a great deal of substance in the request for making *English a medium of studies in Sri Lanka,* re-introducing in a manner that was in vogue earlier. Trial has been given already to the system of having Sinhala and Tamil as media of studies and the country has had sufficient experience of the results. It would be *now reasonable, fair and practical,* to give the *people* and the *student population* the *alternative benefit* of having *at their* option in the future, the opportunity of utilising *any* of the three languages, *Sinhala, Tamil or English as the medium of Instruction. Nothing is lost by giving such an option.* It cannot be denied that there is a feeling that English could be restored as *a* medium of instruction. *It is harmless if people are given the option, without making any particular medium as such compulsory for the entire scheme of studies in ihe curriculum.* It is best as far as possible to *avoid any element of compulsion in most matters at this stage of our national evolution.* This arrangement for option could be tried *for some time* at least till the next Parliamentary General Election. Such a *procedure* will be in keeping with the *ideals of Democracy,* and the *real and permanent needs of the people and their welfare in the fullest manner.*

It may be mentioned. when considering the use of languages, that *English is very useful not only for Scientific, Commercial Medical, Industrial and other material purposes,* but *it is also of equally of great benefit for religious and cultural purposes* and to *facilitate International contacts in every direction which is an indispensable requisite of contemporary human existence.*

It is further submitted that *English* culd well be made *one of the official language of the country* in a *supplementary and complementary* manner *with many benefical results to the individual, to the national and to the entire World community. Such dual provisions could jointly serve very well the course of individual, national* and *World welfare* to *promote which, we as individuals, and as a country, are morally and otherwise obliged.*

**S. Sivasubramaniam**

---

Meanwhile, a section of the University Staff and the Students, Welfare Society is opposed to the setting-up of the Private Medical College because of its admissions requirements and high fees charged—a set-up which they say would benefit only the upper strata of society. The fee for the Private Medical College is Rs. 67,500 for the five year course, if paid in full at the commencement of the course.

## AT REST

*Mr. Lawrence Sinnathamby,* a teacher for many years at Jaffna College and a Head Master under the Mission, passed away on Monday 15-12-80 at his residence at Uduvil.

Mr. Sinnathamby belongs to the Bicknell Era. He was a trained teacher and associated himself actively in sports activities.

His eldest son is now the Manager of the Jaffna College Technical Institute Farm at Maruthanamadam.

*Mrs. Pushpam Rajendra,* wife of the late Mr. P. E. Rajendra, Education Officer (Sports), passed away in the States on 18-12-80. Pushpam is the daughter of the late Mr. Kanapathippillai who was for many years connected with the Uduvil Girls' College as Supervisor of Works. Her ashes were interred on 27-12-80 at the R C. burial grounds, Jaffna.

*Mr. D. J. Thambapillai* (81), former Vice Principal of Kopay Christian College passed away on 13-12-80. Rev. Sarvananthan officiated at the Funeral Service on 17-12-80. The remains were interred at the St. John's Burial Grounds.

Mr. Thambapillai, as a teacher and Vice-Principal, was respected for his self-effacing life and work in the service of the community.

---

## The Ceylon Bible Society

*Rev. Celestine Fernando,* General Secretary of the Ceylon Bible Society, retires at the end of this year after 21 years of association with the Society.

He will, however, continue to serve in an honorary capacity as Research Consultant of the Society.

Rev. Basil Rajasingam, former President of the Methodist Conference succeeds Rev. Celestine Fernando as Secretary.

In writing up the history of the Bible Society and in numerous other ventures, we know the Society leans heavily on the Rev. Celestine Fernando, for guidance enrichment and inspiration.

The *Morning Star* is specially grateful to him for his words of 'appreciation' and encouragement which he has expressed from time to time, both through *The Ceylon Churchman* and through his personal letters, of our work as a Christian Weekly. His recent letter to us is dated 12th December' 1980.

## IN MEMORIAM

In Everloving Memory of



**Kanagam Subramaniam**

Called Home 8th Jan. 1979

"கல்லறை உலகினில் பலவுண்டு அவை சொல்லிடும் கதைகளில் கனிவுண்டு"

Affectionately remembered by her loved ones in Sri-Lanka & abroad.

Kanagamanai,
Chavakacheri.

---

## IN MEMORIAM

In Loving Memory of

**Rosammah John**

Born : 24-8-1892

Departed to Glory : 29-12-1978

*Deep in our hearts you*
*will always stay*
*Loved and remembered*
*everyday*

*By all her loved ones.*

Love Lane,
Uduvil.

---

## University Admissions

Admissions to the Traditional Universities of Sri Lanka, based on the A. L. Examination results of April 1979, are likely to be delayed till February 1981.

There were three cases filed in the Supreme Court, challenging the validity of the Scheme of admissions adopted by the University Grants Commission. The courts have held against the UGC in the case relating to the ratio as between the April and August candidates.

In the other two cases, the Courts have held with the U. G. C. In the last case the Petitioner has been allowed to appeal and until that verdict is given, all admissions will be put by.

Admissions will eventually be made on a single intergrated list with the April and August Examinations being considered a single entity.

# உதயதாரகை
# UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

„நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

## தாரகை ஒளி

தாழ்மையுள்ளம் படைத்தவர்களுடனும் வஞ்சகப் புகழ்ச்சியற்ற வர்களுடனும் பக்தியும் அறவொழுக்கம் பூண்டவர்களுடனுமே பழகுங்கள். அவர்களுடன் வாழ்க்கையை மேன்மையுறச் செய் யும் விஷயங்களைப்பற்றிப் பேசுங்கள். —தொமஸ் கெம்பிஸ்.

மலர் 141 ] 2 — 1 — 1981 [ இதழ் 1

# கால நீரோட்டம் விரைந்து ஓடுகின்றது

காலங்கள் மாறுகின்றன கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் ஒன்றன் பின் ஒன்ருக வந்து போய்க் கொண்டிருக்கின்றன. கால நீரோட்டம் விரைந்து ஓடுகின்றதென்பது மனித சமுதாயம் தோன்றிய காலந்திலிருந்தே காணப்பட்ட சிந்தனை யாகும்.

"சாலப் பசித்தார் பொழுதும் போம்
பாலோடு அன்னம் புசித்தார் பொழுதும் போம்; போம்."

என்பது ஒரு தமிழ்ப் பாடல். செல்வந்தர்கள் காலமும் ஏழை கள் காலமும் பொய்யாய் பழங்கதையாய்க் கனவாய் மெல்லப் போய் விடுகின்றன என்பது அவர் கருத்து

உமர்கய்யாம் என்ற ஒரு பாரசீகக் கவிஞர் கால நீரோட்டத்தின் விரைவினை வெகு அழகாகத் தமது பாடல் ஒன்றில் எழுதியிருக்கின் ருர்.

வாராய் நண்பாய் வருத்தமெனும் வாடைக்காலப் போர்வையினை
நேராய் வரும் இவ் வசந்தமெனும் நெருப்பில் வீசி எறிவாயே
தேரா வாழ்வென்னும் பறவையின்னும் பறக்கும் தூரம் சிறிதேயாம்
பாராய் பாராய் பறவையதோ பறக்கச் சிறகும் விரித்ததடா.

காலம் குறுகியது. அதனுல் வாழ்க்கையே ஆபத்தானது என் றும் சிலர் கருதினுர்கள்.

ஒருவன் ஆயுளாக நூறு வருடங்களைப் பெற்ருலும் அதிற் பாதி யும் நித்திரையிற் கழிந்துவிடும். மிகுதியிலுள்ள பகுதியில் பதினைந்து வருடங்கள் ஒன்றும் அறியாப் பாலகன் பருவம். எஞ்சிய காலத் திலோ பசி, பிணி, முதுமை, துன்பம், ஆகையால் பிறப்பே வேண் டாம் என்று ஒருவர் பாடினுர்.

வேதநூல் பிராயம் நூறு மனுசர் தாம் புகுவரேனும்
பாதியு முறங்கிப் போகும் நின்றதில் பதினை யாண்டு
பே தை பாலகனதாகும் பசி பிணி மூப்புத்துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன ரங்கமா நகருளானே.

என்பது அவர் பாடல். காலம் போதாது. ஆதலால் பிறப்பே வேண்டாம் என்று அவர் பாடினுர்.

திருமறையிலும் காலம் குறுகியது என்ற சிந்தனையை நாம் பரக் கக் காணலாம்,

"நாம் நேற்று உண்டானவர்கள் அல்லவோ?
நமக்கு என்ன தெரியும்
பூமியில் நமது நாட்கள் நிழலே"

என்பது யோபுவின் வாசகங்களில் ஒன்று.

ஆயிரம் வருடங்கள் உமது பார்வையில்
நேற்றுக் கழிந்த சாமம் போல் இருக்கின்றன

என்கிருர் சங்கீதக்காரர். காலம் குறுகியது காலம் விரைந் தோடி மறைகின்றது என்பது பொதுவாக உலகத்தில் தோன்றிய எல்லாருடைய எண்ணமுமாக இருக்கின்றது.

ஆனுல் கிறிஸ்தவன் கால நீரோட்டத்தைக் கண்டு அஞ்சுவ தில்லை, இதற்கு கிறிஸ்தவன் தனது இறைவனே காலத்தின் அதிபதி என்று விசுவாசித்திருப்பது முக்கியமான காரணமாகும். "இது கர்த் தர் உண்டு பண்ணின நாள் இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம் வாருங்கள்" என்று ஒரு பக்தன் பாடினுன். காலம் இறைவனுல் அரு ளப்பட்டதனுல் அதனை நன்கு அனுபவிக்க வேண்டும். காலம் குறைவு என்று எண்ணி அஞ்சி வாழத் தேவையில்லை.

கிறிஸ்தவன் இறைவன் ஒருவனுக்கே தனது காலத்தைப் பற்றிக் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவன் என்று எண்ணியிருக்கின்ருன். நாற்பது வயதில் கண்களை இழந்த மில்டன் என்ற கவிஞன், "கண் ணிழந்த போதிலே" என்ற பாடலில் பின்வருமாறு கூறுகின்ருன். "எனது தாலந்தை மறைப்பது மரணத்திற்கு நிகராகும். ஏனெனில் நான் வீடு திரும்பும்பொழுது எனது நாயகன் என்னைக் கடிந்துகொள்ளு வார்."

கிறிஸ்தவன் இறைவன் அருளால் வாழ்நாள் முழுவதும் வாலி பமே என்று எண்ணியிருக்கின்ருன். மோசே முனிவர் நாற்பது வயது நிரம்பிய கலேப்பை கானுன் பற்றி வேவு பார்க்க அனுப்பினுர். அதே காலேப்பைத்தான் யோசுவா தளபதி கானுனை புற ஜாதிகளிடமிருந்து விடுவிக்க நியமித்தார். அப்பொழுது கலேப்புக்கு வயது எண்பத் தைந்து, அன்றும் நாற்பது வயது வலிமை காலேப்புக்கு இருந்தது.

இதற்குரிய காரணத்தை எண்ணுகமம் 14-ம் அதிகாரம் 24-ம் வசனத் தில் காண்கிருேம்.

என் தாசனுகிய காலேபோ வேறு ஆவியை உடையவனுயிருக்கிற படியாலும் என்னிடம் பூரண பற்றுடையவனுனபடியாலும் அவன் போய் வந்த தேசத்தில் அவனைக் கொண்டு போய்ச் சேர்ப்பேன்.

இது கிறிஸ்தவன் விசுவாசம், இதுவே கால நீரோட்டத்தைக் கண்டு அஞ்சாமல் இருப்பதற்கும், காலமெல்லாம் வாலிபனுய் இருப்ப தற்கும் காரணமாகும்.

## செய்திச் சிதறல்

### பொலிஸ் பகுதியினரின் கரோல் விழா

யாழ். பொலிஸ் பகுதியின ரின் கிறிஸ்மஸ் கரோல் விழா இம்மாதம் 30-ந் திகதி துரை யப்பா விளையாட்டரங்கில் நடை பெறவிருக்கிறது. இதில் பொலிஸ் பான்ட் இசை பல ரைப் பரவசப்படுத்தியது.

### வட்டுக்கோட்டையில் கொள்ளை

வட்டுக்கோட்டைத் தபாற் கந்தோரில் சென்ற வெள்ளிக் கிழமை 19-12-80 எண்பதிஞயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது. நான்கு வாலிபர்கள், காரில் ஊர் மக்களுக்கு பென்ஷனுக கொண்டு வரப்பட்ட பணத்தைக் கொள்ளை யடித்து ஆங்கிருந்த சைக்கிள் களில் ஓடி மறைந்தனர். ஒரு சைக்கிளின் கழன்றுவிட்டதனுல் யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு எஸ். மோகனராஜாவின் சைக்கிளைக் கைப்பற்றிச் சென்ற னர். பொலிஸார் விசாரணை செய்கின்றனர்.

### யாழ்ப்பாணத்தில் பேராசிரியர் C. J. எலியேஸர்

இலங்கைப் பல்கலைக்கழகத் தில் பல்லாண்டு காலமாக கணி தப் பேராசிரியராகவிருந்து தற் பொழுது அவுஸ்திரேலியாவில் பணி புரியும் பேராசிரியர் C. J. எலியேஸர் ஒரு வாரம் யாழ்ப் பாணத்தில் தங்கி தமது நண்பர் கள் உறவினர்களைச் சந்தித்த சென்ற வியாழக்கிழமை (25-12-80) கொழும்பு திரும்பி னர். இவர் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கும் இங்கிலாந்துக் கும் சென்று ஒரு வருடத்தின் பின் அவுஸ்திரேலியா திரும்பு வார்.

### பாற் பண்ணைக்கு நல்லினப் பசுக்கள்

திருநெல்வேலி பாற்பண் ணைக்கு, கால்நடை அபிவிருத்தி அமைச்சு, 65 நல்லினப் பசுக்களை வழங்கியுள்ளது. இவற்றில் 30 பசுக்கள், பளை கால்நடை அபி விருத்தி நிலையத்தில் இருந்தும் 35 பசுக்கள் கேகாலை கால்நடை நிலையத்தில் இருந்தும் பளை கால் நடை நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

### புத்தூரில் நெசவாலை

ஜப்பான் நிறுவனமொன்றின் உதவியுடன் கோடிக் கணக்கான ரூபாய் செலவில் நெசவாலை ஒன்று புத்தூரில் அமைக்கப்பட இருக்கிறது.

கே. ஜி. இன்டஸ்றீஸ் லிமிட் டெட்டினுல் அமைக்கப்படும் இவ் வாலையின் கட்டிட வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

ஆலை இயங்க ஆரம்பித்ததும் இங்கு ஆரம்பத்தில் 500 பேருக் கும் பின்னர் 1500 பேர் வரையி லும் வேலைவாய்ப்பு அளிக்கப் படுமெனத் தெரிகிறது.

### நெடுந்தீவில் கரோல்

நெடுந்தீவில் 22-ம், 23-ம், 24-ம் திகதிகளில் சபைப் பாட கர் கோஷ்டி இல்லங்களைத் தரி சித்தது பல கத்தோலிக்க, இந்து குடும்பஸ்தர் இக் கோஷ்டியை மகிழ்வுடன் வரவேற்றுக் காணிக்கை படைத்தனர். ஆயி ரம் ரூபாவுக்கு மதிகமான தொகையை இக் கோஷ்டியின ருக்கு நெடுந்தீவு மக்கள் வழங்கி யமை குறிப்பிடத்தக்கது.

### சீனுவில் நத்தார் ஆராதனை

சீனத் தலைநகரான பீக்கிங் கில் சென்ற புதன்கிழமை (24-12-80) நள்ளிரவு நத்தார் ஆராதனை நடைபெற்றது. பீக் கிங்கில் இரண்டு தேவாலயங் களே உண்டு. இவற்றில் ஒன்று கலாச்சாரப் புரட்சியின்போது பண்டகசாலையாக மாற்றப்பட் டது. இத் தேவாலயம் இரு பத்திநான்காம் திகதி மீண்டும் திறக்கப்பட்டு நத்தார் ஆராதனை நடத்தப்பட்டது.

## மறுமைப் பிரவேசம்

### சாமுவேல் தம்பையா

வேர்ல்ட் விஷனின் உதவி இயக்குனரும் இளைப்பாறிய காணி அபிவிருத்திப் பதில் ஆணை யாளரும் மெதடிஸ்த திருச்சபை யின் முன்னணித் தலைவர்களில் ஒருவருமாகிய திரு. சாமுவேல் தம்பையா மறுமையெய்தினுர். இவர் குலின் அவர்களின் அரு மைக் கணவரும் காந்தி, புத்திரா, கீர்த்தி ஆகியோரின் தந்தையு மாவர். அன்னுரின் இறுதி ஆரா தனை வெள்ளவத்தை பொஸ்வல் இடத்திலுள்ள அவர் இல்லத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை (21-12-80) நடைபெற்றது. அன்று காலை 10-30 மணிக்கு மூர் றோட் தேவாலயத்தில் விசேட ஆராதனை நடைபெற்றது. கனத்தை மயானத்தில் அன்னு ரின் பூதவுடல் தகனம் செய்யப் பட்டது. அஸ்தி சுண்டிக்குளி சென். ஜோன்ஸ் சேமக்காலையில் அடக்கம் பண்ணப்பட்டது.

* * *

### D. J. தம்பாப்பிள்ளை

கோப்பாய் கிறிஸ்தவக் கல் லூரியின் முன்னுள் உதவி அதிப ரும, திருமதி ரேஸ் அவர்களின் அன்புக் கணவரும காலஞ்சென்ற குணசீலன, ஜெயசீலி தவசீலன், தயாவசீலி செல்வதாஸ், ஞான சீலி ஞானேந்திரன், பதுமசீலி அருள்பூரணம், ஆகியோரின் தந் தையாருமாகிய திரு. தம்பாப் பிள்ளை சென்ற வெள்ளிக்கிழமை (12-12-80) மறுமைக்குள் பிரவே சித்தனர். அன்னுரின் பிரேத சேம ஆராதனை சென்ற புதன் கிழமை (17-12-80) சுண்டிக்குளி பிளசர் லேனிலுள்ள அவர் இல் லத்தில் நடைபெற்றது. வண. ஜோ. சர்வானந்தன் ஆராத னையை நடத்தினுர். வண. I. S. J. வாட்ஸ்வேர்த பாராட்டுரை வழங்கினுர். சுண்டிக்குளி சேமக் காலையில் உயிர்த்தெழுதலின் நம் பிக்கையுடன் நல்லடக்கம் செய் யப்பட்டது.

# கிறிஸ்துவின் அற்புதமான ஜீவியமும், அதில் அடங்கியுள்ள ஒன்பது பெரிய உண்மைகளும்

டாக்டர் ஜேம்ஸ் மேதரின் ஒரு பிரசங்கம். ஆங்கிலத்திலிருந்து, திருமதி இசபேல் அற்புதநாதன் அவர்களால் தமிழாக்கப்பட்டது

தீர்க்கதரிசிகள் இயேசுக் கிறிஸ்துநாதரின் பிறப்பைப் பற்றி அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே முன்னுரைத்த தீர்க்கதரிசனங்கள் யாவும் அவர் பிறந்தபோது பல அற்புதமான முறைகளில் நிறைவேறின.

இயேசுநாதரின் வாழ்க்கை உண்மையாக தெய்வீக வாழ்க்கையேதான்; கடவுள் தாமே விண்ணுலகத்திலிருந்திறங்கி மனுக்கோலம் பூண்டு மனித வாழ்க்கையை நடத்தினார். இயேசுவின் வாழ்க்கை வரலாறு ஒரு தனிப்பட்ட கவர்ச்சியுடையதாக எல்லோரும் ஆராய்ந்து படித்துச் சிந்திக்கவேண்டிய அனைவராலும் மறக்கமுடியாத தனித்துவமான நூதனமான அம்சமாகிவிட்டது.

விவிலிய நூலில் ஆதாம் ஏவாளின் படைப்புத் தொடங்கி, தேவனுக்குக் கீழ்படியாமல் பாவஞ் செய்தவர்களாகி தேவனுக்குத் தூரமாக விலகின காலந் தொடக்கம் தேவன் காலத்திற்குக்காலம் விடுத்துக்கொண்டேயிருந்த செய்தி யாதெனில் 'நான் உங்களை இரட்சிப்பேன்' என்பதே.

வேதாகமம் முதலாம் புத்தகமாகிய ஆதியாகமம் 3:15; 12:3; 49:10; முதலிய வசனங்களிலும் உபாகமம் 18:15; லும் சங்கீதம் 2:2; 45:2; 68:18; 69:21; 110:1; 118:22; 132:11 லும் 'ஒருவர் எழும்புவார், அவர் மனுக்குலத்தாரை இரட்சிப்பார்', என்கிற செய்தியே பல முறை சொல்லப்பட்டிருக்கின்றது. இயேசுவின் பிறப்பிற்கு 600 வருடங்களின் முன்னதாகவே ஏசாயா தீர்க்கதரிசி தொடக்கம் அநேகத் தீர்க்கதரிசிகள் எரேமியா, எசேக்கியல் முதலானோர் இயேசுவின் பிறப்பைப் பற்றித் தீர்க்கதரிசனம் உரைத்தபடியே இருந்தார்கள். பின்வரும் வசனங்களைப் பாருங்கள்: (1) ஏசாயா 2:2—4; (2 7:14; (3) 9:27; (4) 11:10; (5) 25:8; (6) 28:16; (7) 42:1; (8 46:6; (9, 52:14; (10) 53:3; (11) 55:4; (12) 59:16; (13) 61:1; (14) 62:11; (15) 63:1.

இவ்வசனங்களை எல்லோரும் வாசிக்கவேண்டுமென்றும் எப்படி இத்தீர்க்கதரிசனங்கள் எல்லாம் நிறைவேறின என்றும், இயேசுவின், பிறப்பு, வாழ்க்கை முதலியவற்றைக்கூறும் சுவிசேஷங்களையும் வாசிக்கவேண்டுமென்றும் நான் உங்களுக்கு நற்போதனை கூறுகின்றேன். உதாரணமாக அவர் கன்னிகையிடமிருந்து பிறந்ததுபற்றி ஏசாயா 7:14-ல் கூறப்படுகின்றது. ஏசாயா 53:3; 63:1-ல் 'அவர் மக்களால் அசட்டைபண்ணப்படுவார். புறக்கணிக்கப்படுவார்.' என்று கூறப்பட்டிருக்கின்றது. ஏசாயா 25:8-ல் அவரின் உயிர்த்தெழுதல் பற்றிக் கூறப்பட்டிருக்கின்றது. ஏசாயா 59:16-ல், அவருடைய புயம் அவரைத் தாங்குவதுபற்றியும் நீதியே அவரைத் தாங்குவதுபற்றியும் அவரின் திர்க்கதரிசனங்கள் உரைக்கப்பட்டிருக்கின்றன. மற்ற வசனங்களையும் இப்படி ஆராய்ந்துபார்த்தால் யாவும் இயேசுவின் பிறப்பு, ஊழியம் பலாபலன்களைப்பற்றியே கூறுகின்றன.

(தொடரும்)

## கிறிஸ்மஸின் பொருள்

— T. V. S. நீதிதேவன் —

கிறிஸ்மஸ் கிறிஸ்தவ மக்களின் மிக முக்கியமான பண்டிகையாகும். அது அவர்களுடைய இறைவனாகிய இயேசுக்கிறிஸ்து உலகத்திற்கு வந்த நாளாகும். இயேசுக்கிறிஸ்து பாலஸ்தீன தேசத்திலுள்ள மாட்டுத் தொழுவம் ஒன்றிலே பிறந்தார். எந்த விதமான வசதிகளோ, ஆடம்பரங்களோ இல்லாத பிறப்பு அவருடையது. பிறந்தது முதல் இறந்ததுவரை அவர் சாதாரண தொழிலாளியின் மகனாகவே வாழ்ந்தார். அவருக்குச் சொந்தமாக இவ்வுலகத்திலே ஒன்றும் இருக்கவில்லை. ஆனால் இயேசுக்கிறிஸ்துவினுடைய பிறப்பும், வாழ்வும் நமக்குப் பெரியதோர் உண்மையை உணர்த்திக் கொண்டே இருக்கின்றன. அதாவது இந்த உலகத்திலே பயனுள்ள வாழ்வு வாழ்வதற்கு, மக்களை முன்னேறச் செய்யும் வாழ்வு வாழ்வதற்கு எந்தவிதமான ஆடம்பரங்களும், வசதிகளும் தேவையில்லை என்பதாகும். இன்று பலர் தம்மிடம் கார் இல்லை, தொலைபேசி இல்லை, பண வசதி இல்லை என்று அங்கலாய்க்கின்றனர். இவைகள் இருந்தால் தாம் அநேக விஷயங்களைச் சாதித்துவிடுவோம் எனக் கூறுகின்றனர். நவீன உலகில் விஞ்ஞான வளர்ச்சியினால் ஏற்பட்ட கருவிகள் எல்லாமே தமக்கு அவசியம் என்று கூறுகின்றனர். ஆனால் உலகம் முழுவதையுமே தமது வார்த்தைகளினாலும். செயல்களினாலும் மாற்றியமைத்த இயேசுபிரான் அவைகள் ஒன்றும் தமக்குத் தேவையில்லை என்று காட்டினார். உலகத்திலே எந்தவித வசதியுமில்லாமல் மிகுந்த பயனுள்ள வாழ்க்கை வாழலாம் என்பது அவர் தருகின்ற செய்தியாம்.

கிறிஸ்து இறைவனாக இருந்த பொழுதும் அவர் மனிதராகி மனு மக்களுடன் வாழ்ந்து வந்தார். அவருடைய வாழ்க்கையும், பணியும் மனிதப் பிறவி எவ்வளவு சிறப்பு வாய்ந்தது என்பதனை நமக்கு உணர்த்திக்கொண்டே இருக்கின்றது. "மனிதன் என்பவன் தெய்வமாகலாம்" என்கின்றது ஒரு சினிமாப் பாடல். இயேசுபிரான் மனிதப் பிறவியெடுத்து அதனை நிரூபித்துக் காட்டினார். மனிதன் என்பவன் தெய்வமாகலாம் என்பது நம்ப முடியாத போதனையல்ல. இயேசுநாதர் மனிதப் பிறவியெடுத்த போது அது செய்முறையில் காணப்பட்டது. மனித ஜென்மம் பாவமும், பொறாமையும், பேராசையும் பிடித்ததென்று பலர் எண்ணுகிறார்கள், ஆனால், இயேசுநாதருடைய பூவுலக வாழ்க்கை ஒருவன் மனிதனாக இருந்துகொண்டே உலகில் பலவற்றைச் சாதிக்க முடியும் என்பதை உணர்த்துகிறது.



## அன்புத் தாய்

— ச. சிவசங்கர் —

அலைகடல்தான் ஓய்ந்தாலும் அவள் அன்புக்கடல் வற்றாது
அன்புத்தாயவளின் அரவணைப்பில் அத்தனை இன்பம் எங்கிருந்து
வந்ததோ?
அறுபது ஐந்து நாள் அணையா விளக்காக அரும்பாடுபட்டு
அவள் தன் மகவைப் பெற்றெடுத்தாள் அகன்ற இவ் அவனியிலே,
அருமையாக வளர்த்தெடுத்தாள் அன்புடன் அமுதூட்டினாள்
அழுததுமே அள்ளியெடுத்து அனேக முத்தமிடுவாள்
அடியெடுத்து வைத்து நடந்திடவே அருமையாகக் காட்டிடுவாள்
அடங்காத ஆவலுடன் அரிசுவட்டைப் புகட்டிடுவாள்.
அன்னநடை பயின்றுவரும் அவள் அன்புப் பிள்ளையதன்
'அம்மா' என்ற அழைப்பொலி கேட்டதும், உடன்
அன்றலர்ந்த தாமரைபோல் அவள்முகம் களித்திடுமே
அகமலர்ந்து அத்தனையையும் அன்றே செய்திடுவாள்.
அவள் ஒரு தொடர்கதைதான் அதற்கு ஒரு முடிவில்லை
அப்பிள்ளையின் எதிர்காலம் ஒளிமய மாவதற்காக
அயராது அவள் கடமையை அருமையாகச் செய்திட்டாள்
அடுத்தது யார் கடமை என அவள் பிள்ளை உணராதா?

## அநீதி

அநீதியிழைப்பவன் அநீதிக்கு உட்பட்டவனைவிட அதிகத் துயரடைவான். — பிளேட்டோ.

அநீதியைத் தாங்குவதைவிட, அநீதி யிழைப்பது மேல் என்று எவரும் சொல்லத் துணியார். — அரிஸ்டோட்டல்.

உனக்கு அநீதி செய்யப்பட்டால் பொறுத்துக்கொள்; நீ அதைச் செய்ததில்தான் துக்கம் ஏற்படும் —டெமாக்ரிடஸ்.

அநீதியானது எதுவும் தெய்வத்தின் திருவுளத்திற்கு எதிரானது; ஆகவே, அநீதியாக நடப்பவர்கள் உண்மையான நிலையான இன்பம் அடைய முடியாது என்பது அதிலிருந்து தெரிகின்றது. — ஸ்டிரெச்,

பெருங்கூட்டமான மக்கள் தங்களை ஆள்பவர்களின் சுயநலத்தையும் அநீதியையும் தெரிந்து கொண்டால், எந்த அரசாங்கமும் ஓராண்டு கூட நிலைத்திருக்காது. உலகமே புரட்சியில் கொந்தளிக்கும்.

— தியோடோர் பார்க்கெர்.

அரசனாயினும் சரி, மக்களில் ஒருவனாயினும் சரி, எவனிடம் அதிகாரம் உளதோ, அவன் உண்மையையும் ஒழுக்கத்தையும் போற்றிக் கொள்ளாவிட்டால், அதிகாரத்தை நிச்சயம் துர்விநியோகம் செய்வான்.

— லாஃபான்டெயின்.

அநீதிக்கு ஏற்ற அமைச்சன் ஏமாற்று. — பர்க்.

அநாதைக் குழந்தைகளின் செல்வங்களை அநீதியாக விழுங்குபவர்கள் நிச்சயமாக நெருப்பையே விழுங்கித் தங்கள் வயிறுகளில் இறக்கவேண்டியிருக்கும். கொழுந்து விட்டெரியும் நெருப்பிலே அவர்கள் வேக வேண்டியிருக்கும். — குர் ஆன்

முறைதவறிச் சேர்ந்த செல்வம் முட்கம்பிகளுள்ள அம்பு போன்றது. அவை உடலிலிருந்து வெளியே எடுப்பதில் பயங்கரமான வேதனை ஏற்படும். இல்லையெனில் அதுவே உனக்கு அழிவை உண்டாக்கிவிடும்.

— ஜெரிமி டெய்லர்.

அவசரத்தாலோ அல்லது சோம்பலாலோ அல்லது இரண்டும் சேர்வதாலோ, அநீதி ஏற்படுகின்றது. ஆத்திரகாரரும் அயர்வுடையவரும் அநீதியாக நடப்பது அரிது; அநீதியாளர் சிறிதுகூடப் பொறுத்திருக்கமாட்டார், அல்லது அதிக காலம் காத்திருப்பர். — வீவேட்டர்.

அநீதிகள் அனைத்திலும். சட்டத்தின் பெயரால் இழைக்கப்படுவதே மிகவும் அநீதியானது; கொடுமைகள் அனைத்திலும், நியாயத்தைப் பாராமல் சட்டத்தின் கழுத்தை மட்டும் பார்த்துத் தண்டித்தலே சிறிதுகூட ஆதரிக்கத் தகாதது. — லா எஸ்டிரேஞ்ச்.

கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல் கோடிச் சூழாது செய்யும் அரசு. — திருவள்ளுவர்.

தனியின்மை ஞாலத்திற்கு எற்றற்றே, வேந்தன் அளியின்மை வாழும் உயிர்க்கு.

— திருவள்ளுவர்.

மன்னணி(ல்) நின்று மனவேறுறம் சொல்ல வேண்டாம்.

— உலகநீதி.

இருவர் தம் சொல்லையும்
ஏழுதரம் கேட்டே,
இருவரும் பொருந்த
உரையாராயின்,
மனுமுறை நெறியின்
வழக்கிழந்தவர்தாம்
மனமுற மறுகிநின்(று)
அழுத கண்ணீர்,
முறையுறத் தேவர்
மூவர் காக்கினும்,
வழிவழி ஈர்வதோர்
வாளாகும்மே.
— வெற்றிவேற்கை.

## நேரடித் தொலைபேசி

ஏழுலட்சத்து எண்பதினாயிரம் ரூபா செலவில் சாவகச்சேரி, கரவெட்டி, சித்தன்கேணி ஆகிய இடங்களில் மூன்று நுண்ணலை தொலைபேசி பரிவர்த்தனை நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இதற்கான நிதியினை யாழ் மாவட்ட அமைச்சு வழங்கியுள்ளது.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமான நேரடித் தொலைபேசி வசதியளிக்கும் திட்டத்தின் கீழ், யாழ் மாவட்டத்தில் தற்போது இயங்கும் 18 தொலைபேசி பரிவர்த்தனை நிலையங்களும் 8 நுண்ணலை தொலைபேசி பரிவர்த்தனை நிலையங்களாக மாற்றியமைக்கப்பட்டுவருகின்றன. இவற்றில் கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட நுண்ணலை பரிவர்த்தனை நிலைய வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

## ஊழியர் இடமாற்றம்

சென். ஜோன்ஸ் தேவாலயத்தின் உதவிக் குருவாக இதுவரை பணியாற்றிய வண. ஜோன் ஐசாயா வவுனியா திருச்சபைக்கு ஊழியனாக இடமாற்றம் பெற்றுள்ளார்.

சென். பீற்றர்ஸ் தேவாலயத்தின் குரு வண. S. W. அரியராஜா ஜெனிவாவில் பதவியேற்றிருப்பதனால் வண. G. A. உவின்சிலோ புதிய ஊழியர் பதவியேற்கும்வரை பணி புரிந்துவருகின்றார்.

*EDITORIAL*

## Kalawana

"*Democracy — the way we practise it — while being the best form of government is also a difficult form of government*".

This truism embodied in the New Year Message of our Prime Minister, coming in the wake of the Kalawana impasse, bears a tinge of irony.

For, from whatever angle we look at the problem, *Kalawana* does appear to the "naked eye" (by which we mean the eye of the average citizen of this country) as a political "comet" with its fiery 'tail' protruding into areas which have been the traditional preserve of democracy in this country.

We are happy, however, that the government has not made an attempt to escape from the problem or conceal its ramifications.

The frank statements made by the President and the Prime Minister, indicate their awareness of the responsibility that now rests on the Parliament to resolve the 'conflict' in a manner which will in no way prejudice the imsge of Sri Lanka as a Free Democratic Socialist Republic, in Asia.

The government position, as we see it, is that in nominating a person on 18-1-79 for a vacant seat (rendered void by the continuous absence of the UNP incumbent) the United National Party was only exercising a *right* it had, under the Constitution.

As the member nominated, was the same person who caused the vacancy by his absence, a ruling from the Speaker was necessary. The Speaker, after ascertaining the facts relating to his continued absence, gave a ruling in favour of the member.

Independently of this sequence of events, the Supreme Court was hearing an election petition against this same member. The sequel was that the Court upheld the petition and declared the Kalawana Seat to be void.

But the Speaker's ruling related to a point of time much earlier than the Supreme Court decision, although by a quirk of misfortune, it was the same member who was enmeshed in this tangled political situation.

Both the Supreme Court and the Speaker in Parliament had acted correctly in their domains. The government, under these circumstances thought it prudent to bring in *a Third Amendment to the Constitution* which would resolve this 'conflict'.

The Civil Rights Movement objected to such an amendment on the ground that the nomination on 18-1-79 was made, pending the result of an election petition in the Supreme Court against the member. When the result is made known and *Kalawana* is declared void, it means that the United National Party ceases to be represented at Kalawana, and the party becomes ineligible to nominate a member.

This is the story of *Kalawana* — a curious amalgam of legal constitutional and ethical issues—which the government has all of a sudden been confronted with.

"*Ugly facts*", it has been said "*are always a challenge to beautify them*". In our present political context, when the country is getting spruced up to celebrate a great political event in our annals — the Golden Jubilee of Adult Franchise — It is incumbent on us not to allow even a semblance of 'ugliness' to dot our political landscape. There can be little doubt that though no blame can be pinned on any one, there is a measure of ugliness in the episode.

A consistent policy of keeping the Supreme Court profile high, is one way by which 'ugly' developments of this nature could have been contained.

The recent decision of the government to put aside all University Admissions *sine die* till the last University case is disposed of, was a hard decision to take but a commendable one. We wish that the policy had covered all state matters that were pending a court ruling.

Above all, in our view, amendments and referendums in a democratic set up should be more the exception than the rule, in the political life of the nation.

There is great substance in the comment of a US political critic that the proliferation of referendums and amendments will only reflect the belief that when representatives do make policy, they do it badly.

*IN BRIEF*

- A *Lock-Out Victims Fund* to help all who are suffering by having lost their jobs as a result of the strikes has been opened at CWF office, 39, Bristol Street, Colombo 1.
- *Matale District* will have the first of the 16 massive Technical Schools to be set up in the country at a cost of 1.2 million Rupees.
- *The Role of Youth in Church and Mission* will be the theme of an International Consultation to be held by the Lutheran World Federation (LWF) in 1981 in West Germany. No exact date has been decided.

## Electrification of 155 miles of Rail Track

The Ceylon Government Railway has signed yesterday a contract for consulting on engineering services with *The Pacific Consultant International*, a Japanese firm.

The Report will be ready in six months and the fee will be Rs. 3.5 million in foreign currency and Rs. 703,890 in local currency.

The electrification of the Colombo suburban railway is expected to cost between Rs. 400 and Rs. 500 million.

The area to be electrified will be Colombo Fort to Polgawela, Fort to Panadura, Ragama to Negombo and two miles on the approach road to Katunayake.

## Well Paid Employees of Sri Lanka

Hotels and Banks are the most remunerative fields of employment in the country and employees in these fields also enjoy the most fringe benefits.

One indication of this fact is that dealers in motor cycles (Yamaha, Honda, Suzuki) have made the highest sales to Bank employees and hotel staff.

According to an article in *Tribune* (13-12-80), a peon in a bank now gets Rs. 1000 a month with his normal overtime and any employee at *Oberoi* or *Hotel Continental* (including waiters and room boys) could earn up to Rs. 1700 a month (exclusive of tips).

A knowledge of English is not insisted on, by the state banks but spoken English is a pre-condition of employment in any hotel.

## Sri Lanka's First Private Medical College

*The North Colombo Medical College* is scheduled to commence in October 1981 with 100 students selected on merit on the results of the AL Examination.

The qualifications for applying for admission to the College are the same as for the State Medical Faculties.

But students for the Private Medical College will have to face an Interview.

A Fees of Rs. 67,500 will be charged for the full course of five years if the students opt to pay the whole amount on admission.

Other schemes which allow monthly payments of Rs. 500 or Rs. 1000/- will entail a total cost of Rs. 95,000 and Rs. 85,000 respectively with a refundable deposit of Rs. 5000.

The M. B. B. S. Degree will be awarded to students, on the successful completion of their course, by the Colombo, Peredeniya or Jaffna Medical Faculties.

*For the Record*

## Why Parliament is meeting on 6-1-81

*(Prime Minister's Statement)*

I will answer four questions. Did the courts act legally when hearing the Kalawana election petition. My answer is 'yes'. Did the President act legally? I say 'yes'.

Did the Commissioner of Elections act independently? I say 'yes'. Did the Speaker act constitutionally? I say 'yes'.

The 1977 elections were held under the 1972 Constitution of the SLFP.

The Kalawana Election Petition was heard under the old election law. The constitution was changed but the old election laws remained.

Before the courts gave the judgement, a vacancy occured in the House and this was filled under the new constitution under the Election Law which is in operation. The New Election Laws have not come into operation yet.

The Commissioner of Elections and others followed the procedure under the new constitution to fill the vacancy.

Under the provisions of the Parliamentry Elections Order in Council, the petition is heard in the courts. Under Section 82, the courts have to rule on corrupt practices.

The Election Judge then sends a certificate to the President on the ruling.

Under the Election Law, all have acted properly.

How did the Speaker act constitutionally? He can look only at the constitution, not at the Election Law.

Under the constitution, the Speaker gave the ruling that the Member for Kalawana's appointment stood.

The member for Kalawana met with a serious accident and could not get leave of Parliament.

There is a conflict and we want to resolve that conflict. That is why we are meeting on January 6.

*Sun 24-12-80*

## Bible House in Bangladesh

The population of Bangladesh is some 82 million, Muslim Constitute 85 per cent of the population, Christians are fewer than one per cent.

The New Bible of the Bangladesh Bible Society was dedicated at Dacca early this year. The common language New Testament in Bangali was published in 1978 and translation of the Old Testament is under way.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB / 8920 / 78.*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 2nd January, 1981.